# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி: 044 – 22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முறையீட்டு மனு எண். 113 /பேரூ/2023, நாள். 15 .6. 2023**

திரு. B.J. பீமன்,
பாக்கோரை,
குந்தாபாலம்,
நீலகிரி மாவட்டம் ... மனுதாரர்

செயல் அலுவலர்,
கீழ்குந்தா பேரூராட்சி,
நீலகிரி மாவட்டம் .... எதிர்மனுதாரர்

நீலகிரி மாவட்டம், பாக்கோரை, குந்தாபாலம் அஞ்சல், கதவு எண்.6/231D2 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. B.J. பீமன் என்பவரது 09.03.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.03.2023 அன்று பெறப்பட்டு, 113/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நீலகிரி மாவட்டம், பாக்கோரை, குந்தாபாலம் அஞ்சல், கதவு எண்.6/231D2 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. B.J. பீமன் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

" எங்கள் குடும்பத்திற்கு சொந்தமான மாட்டுக்கொட்டகை அதன் கதவு எண். 6/241 A ஆகும். அதற்கு எனது தந்தை B.K. ஜோகைய்யா அவர்கள் தான் உயிருடன் இருக்கும் வரை கீழ்குந்தா பேரூராட்சிக்கு வீட்டுவரி கட்டி வந்துள்ளார். அவர் காலமான பிறகு எனது மூத்த சகோதரர் J. லிங்கன் அவர்கள், எனக்கும் எனது சகோதரர் சகோதரிகளுக்கும் தெரியாமல் எங்களிடம் வாரிசு சான்றிதழ் பெறாமல் எங்கள் கையொப்பம் இல்லாமல் தனது பெயருக்கு கதவு எண். 6/255 என்று மாற்றி வீட்டு வரி கட்டி வந்துள்ளதாக தற்போது எங்களுக்கு தெரியவர நான் செயல் அலுவலரிடம் எனது ஆட்சேபனையை தெரிவித்து RTI மனு கொடுத்தேன். அதில் எங்கள் தந்தை B.K. ஜோகைய்யா பெயரில் வீட்டு வரி கட்ட

அனுமதிக்கும்படி கேட்டு, அதற்கு H. ரவிக்குமார், செயல் அலுவலர், கீழ்குந்தா பேரூராட்சி அலுவலகத்திலிருந்து எனக்கு வந்துள்ள RTI பதிலில் இது மூன்றாவது நபர் தகவல் என கூறி தகவல் தர மறுப்பதுடன் உங்களுக்கு தகவல் தர வேண்டும் என்றால் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கும்பட்சத்தில் தங்களுக்கு பதில் தருகிறேன் என பதில் தந்திருக்கிறார். நான் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்க 2j மற்றும் 4(1b) யின்கீழ் கேட்கப்பட்ட தகவல்களை தர மறுப்பதுடன் அதை பார்வையிடவும் அனுமதிக்காதபட்சத்தில் நான் எங்கள் தந்தை செலுத்தி வந்த காலத்தின் ரெக்கார்டுகளையும் வீட்டுவரி ரசீதுகளின் நகல்களையும் எவ்வாறு கொடுக்க முடியும் என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 19(1) மேல் முறையீட்டு மனு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், உதகமண்டலம் நீலகிரி அவர்களுக்கு அனுப்பாமல் பொது தகவல் அலுவலர் அவர்கள் H. ரவிக்குமார், கீழ்குந்தா செயல் அலுவலர் கையொப்பம் இட்டு எனக்கு தகவல் தந்துள்ளார். இது முற்றிலும் தவறாகும். மேலும் இவ்வாறு கீழ்குந்தா பேரூராட்சிக்கு உட்பட்ட ஏழை எளிய பாமர மக்கள் தங்களுக்கு பேரூராட்சி அலுவலத்திலிருந்து ஏதாவது ஆவணம் வேண்டி விண்ணப்பித்தால் அவர் கொடுக்கும் பதில் இது மூன்றாம் நபர் பற்றிய தகவல் என்றும் உரிய ஆவணங்கள் சமர்ப்பித்தால் தருவேன் என கூறி பாமர மக்களை ஏமாற்றி விட்டு வசதிபடைத்தவர்களுக்கு சாதகமாக நடந்து கொள்வார். மேலும் நான் RTI மூலம் தகவல் கேட்டதற்கு உங்கள் மீது பணி செய்ய விடாமல் தகவல் கேட்டு தொந்தரவு செய்வதாக காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதாகவும் மேலும் எனது வக்கீல் அவர்கள் உங்களை கவனித்து கொள்ளுவார் என மிரட்டுகிறார். மூத்த குடிமகனாகிய எங்களை போல் உள்ளவர்கள் நீதிமன்றம் மற்றும் காவல் நிலையத்திற்கு மூப்பின் காரணமாக எங்கும் மன உளைச்சலுடன் அலைய முடியாததால் தங்களிடம் நீதி கேட்டு இப்புகார் மனுவை சமர்ப்பிக்கின்றேன் என்றும் உரிய நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக் கொள்கிறேன்".

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீது விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 20.03.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் கீழ்குந்தா பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

கீழ்குந்தா பேரூராட்சி செயல் அலுவலர் தனது 02.06.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

<u>மனுதாரர் கோரிய தகவல்</u> :-

6/241-A என்ற கதவு எண் தற்பொது இல்லை எனவும் 6/241–A என்ற கதவு எண் எவ்வாறு 6/255 என மாற்றப்பட்டது என கோரியுள்ளார்.

<u>பேரூராட்சியால் அளிக்கப்பட்ட தகவல்கள்</u>:–

பேரூராட்சியின் சொத்துவரி பதிவேட்டின்படி மனுதாரர் தெரிவித்த கதவு எண். 6/241A இல்லை எனவும் மேலும் அதற்கான இரசீதோ அல்லது ஆவணங்களோ இருப்பின் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. அன்றியும் ஒரு கதவு எண் என்பது நிலையான எண்ணாக இருப்பதால் கதவு எண் ஏதும் மாற்றம் செய்யப்படவில்லை என்ற தகவலை ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

மேலும், வீடு சொத்து தொடர்பானதாக உள்ளதால் தங்களுக்கு மட்டும் பங்குள்ளது என தெரிவித்துள்ளீர்கள். வாரிசுதாரர்கள் அனைவரும் விண்ணப்பிக்கும் பட்சத்தில் நடவடிக்கையெடுக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

மனுதாரர் கோரிய தகவல் :-

கீழ்குந்தா பேரூராட்சிக்குட்பட்ட பாக்கோரை கிராமத்தில் கதவு எண். 6/255 கொண்ட வீடு தனது தகப்பனார் திரு. B.K. ஜோகைய்யா என்பவர் பெயரிலிருந்து எப்பொழுது திரு. ஜே. லிங்கன் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது எந்த ஆண்டு எந்த மாதம் எந்த நாளில் மற்றும் எந்த அலுவலர் கையொப்பமிட்டுள்ளார் எனவும் அந்த வீடு தனக்கும் பங்குள்ளது அதற்கான விவரங்களை கோரியுள்ளார் மேலும் மேற்படி வீடு அமைந்துள்ள இடம் நத்தம் பூமி ரெவின்யூ துறை பூமியெனவும் அதற்கு கதவுமில்லை; மேற்கூறையுமில்லை, பட்டாவுமில்லையெனவும் ஆனால் அதில் தனக்கும் பங்குள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

இப்பேரூராட்சியால் அளிக்கப்பட்ட தகவல்கள்

மேற்படி 6/255 கதவு எண் கொண்ட வீடு சொத்துவரி பதிவேட்டின்படி திரு. லிங்கன் பெயரில் உள்ளது. நீண்டகாலமாக அதற்கான வீட்டுவரிகளை திரு. லிங்கன் என்பவர் செலுத்தி வருகிறார் (தற்போது கடைசியாக 4 ஆண்டுகளுக்கான சொத்து வரி பதிவேடு விசாரணைக்கு தாக்கல் செய்யப்படுகிறது) மேலும் திரு. லிங்கன் என்பவரை கேட்டபொழுது தங்களது வீடு தொடர்பான தகவல்களையும் திரு. B.J. பீமன் என்பவருக்கு வழங்க வேண்டாமெனவும், தங்களுக்குள் குடும்ப சொத்து தொடர்பாக வழக்குகள் உள்ளதாகவும், ஆட்சேபணை மனு அளித்துள்ளதாலும் மனுதாரர் கோரிய தகவல்கள் மூன்றாம் நபரின் விவரங்களாக இருப்பதாலும் மேலும் மேற்படி வீடு உள்ள நிலமானது ரெவின்யூ துறை பூமியெனவும், நத்தம் பூமி அதற்கு கதவுமில்லை மேற்கூறையுமில்லை. பட்டாவுமில்லையென மனுதாரரே தெரிவித்துவிட்டு அதில் தனக்கு பங்குள்ளது என தெரிவித்தபடியால் ரெவின்யூ பூமி அரசாங்க நிலம் தங்களுக்கு எப்படி பங்குள்ளது என தெரிவிக்கிறீர்கள் என்றும் அரசாங்க நிலத்தை அபகரிக்க வகைதேடுவதாக உள்ளதை கருதி அதற்கான விளக்கத்தினை வழங்குமாறு மனுதாரரை கேட்கப்பட்டதில் நாளது வரை அதற்கான விளக்கம் வழங்கவில்லை.

மேலும், மேற்படி வீடு தனது தகப்பனார் திரு. B.K. ஜோகைய்யா அவர்கள் 07.01.1996 அன்று காலமாகி, தற்போது 26 ஆண்டு காலமாக மேற்படி தங்களுக்கு பங்குள்ளது என தெரிவித்த வீட்டிற்கு தாங்கள் ஏன் வீட்டுவரி செலுத்தவில்லை. அதற்கான வீட்டுவரியை செலுத்த தங்களின் குடும்ப உறுப்பினர்களால் யாரை நியமித்துள்ளீர்கள் என்பதற்கான விளக்கத்தினை கேட்கப்பட்டதில் நாளது வரை அதற்கான விளக்கத்தினை இப்பேரூராட்சிக்கு வழங்காமல் உள்ளார் என்கின்ற தகவல் தெரிவிக்கப்படுகிறது.

3) முறைமன்ற நடுவம் அவர்களுக்கு இப்பேரூராட்சியால் வழங்கப்படும் அறிக்கை:-

மனுதாரர் ஆக்கிரமிப்பு தொடர்பாக 03.03.2023 அன்று அளிக்கப்பட்ட மனுவினை பேரூராட்சியால் 12.04.2023 அன்று ஆய்வு செய்யப்பட்டதில் அப்பகுதியில் திரு.T.இராமசந்திரன் என்பவர் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிய மாட்டுக்கொட்டகை ஆக்கிரமிப்பில் உள்ளதெனவும் அதனை ஒரு மீட்டர் அளவில் இடிக்க வேண்டுமெனவும் மற்றும் அதே வரிசையிலுள்ள தனக்கு வேண்டியவர்களின் வீட்டை ஏதும்

செய்யக்கூடதெனவும், நியாயமில்லாமல் பாரபட்சம் காட்டி தான் ஒரு சமூக ஆர்வலர் என கூறியும் ஊர் தலைவர் என கூறியும் மேற்படி அமைதியாக உள்ள கிராமத்தில் சமூக பிரச்சனைகளை உருவாக்கி வருகிறார். மேலும் செயல் அலுவலராகிய நான் அதெப்படி இந்த கட்டிடத்தை மட்டும் இடிக்க தெரிவிக்கிறீர்கள் அருகிலுள்ள கட்டிடமும் அதே வரிசையில்தானே உள்ளது அதை ஏன் இடிக்கக்கூடாது என தெரிவிக்கிறீர்கள் என கேட்டதில் சரியான முறையான விளக்கம் ஏதும் தெரிவிக்காமல் தன்னிச்சையாக சத்தம் போட்டுக் கொண்டு தனது வீட்டிற்கு சென்றுவிட்டார். இது குறித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகாக இப்பேரூராட்சியால் மஞ்சூர் காவல்துறைக்கு (கடிதம் ந.க. எண். 107/2023 நாள் 03.05.2023ல்) புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் தகவல் அறியும் உரிமை சட்டம் மற்றும் பொது விண்ணப்பங்கள் மூலம் அதிகப்படியான தகவல்கள் கோரியதால் பேரூராட்சி பணியாளர்கள் தங்களுக்கென்றே அதிகபடியான நேரத்தை ஒதுக்கப்பட வேண்டியுள்ளதாலும் அதிக தேடுதலுக்குட்பட்ட தகவல்களாதலாலும் மற்றும் பொதுமக்களுக்கு அத்தியாவசிய தேவையான பொதுசுகாதாரம், குடிநீர், தெருவிளக்கு மற்றும் நிர்வாக பணிகளை மேற்கொள்ள இயலாத சூழல் உருவாகி வருகிறது.

மனுதாரர் எந்த வருடம் எந்த மாதம் என எதையும் குறிப்பிடாமல் அலுவலகத்திலுள்ள வீட்டுவரி ஆவணங்களையும் கோப்புகளையும் மற்றும் வீட்டு வரி செலுத்தியதற்கு கொடுக்கப்பட்ட இரசீது புத்தகங்களையும் நான் ஒருவர் துணையுடன் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 பிரிவு2Jன் கீழ் ஆய்வு செய்து குறிப்பெடுத்துக் கொள்கிறேன் என கூறி பேரூராட்சியின் பணி நேரத்தை வீணாக்கி வருகிறார்.

இப்பேரூராட்சியின் 12.04.2023 ஆய்வு நாளில் மனுதாரர் பேரூராட்சியின் நடைப்பாதையை ஆக்கிரமித்து தனது வீட்டின் படிகட்டுகள் அமைத்துள்ளார் மற்றும் அரசாங்க நிலத்தை ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளார் என பொதுமக்கள் புகார் தெரிவித்ததையடுத்து மனுதாரர் அதற்கான ஆவணங்களை (சிட்டா, வில்லங்கம் சான்று, Site Plan, வீட்டு வரைப்படம் நிலம் தொடர்பான ஆவணங்களை வழங்கக்கோரி இப்பேரூராட்சியால் 3/5/2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டதில் நாளது வரை ஆவணங்கள் வழங்காமல் உள்ளார் என கீழ்குந்தா பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோருக்கு இம்முறைமன்ற நடுவத்தில் 05.06.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) 05.06.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"நீலகிரி மாவட்டம், பாக்கோரை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் எங்களது மூதாதையருக்கு சொந்தமான கதவு எண் 6/241Aல் அமைந்துள்ள மாட்டுக் கொட்டகையின் சொத்து வரி எங்களது தந்தையின் பெயரில் இருந்துவந்தது. எனது தந்தை 26 வருடங்களுக்கு முன்பே காலமாகிவிட்டார். மேற்கண்ட எனது தந்தையின் பெயரில் இருந்துவந்த சொத்து வரி எனது சகோதரர்களில் ஒருவரான திரு. லிங்கன் என்பவரின் பெயருக்கு எவ்வித ஆவணமுமின்றி மாற்றப்பட்டுள்ளது. இது குறித்த பேரூராட்சி செயல் அலுவலருக்கு புகார் மனு அனுப்பியும் நடவடிக்கை ஏதுமில்லை.

மேலும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மேற்கண்ட விவரங்கள் கேட்கப்பட்டும், எவ்வித பதிலும் இல்லை. எனவே, எனது சகோதரர் திரு. லிங்கன் என்பவரின் பெயரில் உள்ள சொத்து வரி கேட்பை முன்னர் இருந்தவாறு எனது தந்தையின் பெயரில் மாற்றிட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எனது 9.3.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

6) கீழ்குந்தா பேரூராட்சியின் செயல் அலுவலர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோர் 05.06.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்கள் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

நீலகிரி மாவட்டம் கீழ்குந்தா பேரூராட்சிக்குட்பட்ட பாக்கோரை கிராமத்தில் கதவு எண் 6/255 என்கின்ற விலாசத்தில் அமைந்துள்ள வீட்டிற்கு திரு. பி.கே. ஜோகைய்யா என்பவரின் மகன் திரு. லிங்கன் என்பவரின் பெயருக்கு சொத்து வரி கேட்பு அளிக்கப்பட்டு திரு. லிங்கன் என்பவரே கடந்த 4 ஆண்டுகளாக வரி செலுத்தி வருகிறார். 4ஆண்டுகளுக்கு முன்னர் யார் பெயரில் சொத்து வரி செலுத்தப்பட்டு வந்தது என்கின்ற விவரம் எங்களுக்கு தெரியவில்லை என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் கீழ்குந்தா பேரூராட்சி அலுவலரால் சமர்ப்பிக்கப்படும் 2.6.2023 நாளிட்ட கடிதத்தல் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம் கீழ்குந்தா பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, செயல் அலுவலர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் இந்நேர்வை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

நீலகிரி மாவட்டம், பாக்கோரை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் கதவு எண் 6/241A-ல் அமைந்துள்ள மாட்டுக்கொட்டகை, இந்த இடத்திற்கு பட்டா இல்லை இருப்பினும் மேற்படி இடத்திற்கு மனுதாரர் B.J. பீமன் என்பவரின் தந்தை திரு. பி.கே. ஜோகைய்யா என்பவர் பல ஆண்டுகளாக சொத்துவரி கட்டிவந்துள்ளார். மனுதாரரின் தந்தை 7.1.1996 அன்று காலமாகிவிட்டார். அவரது மனைவி உட்பட 7 வாரிசுதாரர்கள் இருந்த நிலையில் திரு. பி.கே. ஜோகைய்யாவின் மனைவி திருமதி சின்னம்மாள் 10.08.2002 அன்று காலமாகிவிட்டார். மனுதாரரின் தகப்பனார் திரு. பி.கே. ஜோகைய்யா இறந்தபிறகு மேற்கண்ட கதவு எண் 6/241A–க்கான சொத்துவரி யார் பெயரில் கட்டப்பட்டு வந்தது என்பதற்கு எந்த ஆதாரமுமில்லை. ஆனால் மேற்படி கதவு எண் 6/241A தற்போது நீக்கம் செய்யப்பட்டு 6/255 என்ற கதவு எண்ணாக மாற்றம் செய்யப்பட்டு வாரிசுதாரர்களின் ஒருவரான திரு. ஜே. லிங்கன் என்பவர் கடந்த 4 ஆண்டுகளாக சொத்து வரி கட்டி வருகிறார். கதவு எண் 6/241A என்று தமது தந்தை பெயரில் இருந்த இடம் எப்படி 6/255 என்ற எண்ணில் தனது சகோதரர் திரு. ஜே. லிங்கன் என்பவருக்கு மாற்றம் செய்யப்பட்டது என்று மனுதாரரால் கோரப்பட்ட தகவலை பாக்கோரை செயல் அலுவலர் மூன்றாம் நபர் தகவல் என்பதால் தகவல் தர இயலாது என மறுக்கிறார். ஆனால் <u>6/241A என்ற கதவு எண் கொண்ட சொத்தை பிறவாரிசுகளின் ஒப்புதல் இல்லாமல் ஜே.லிங்கன் என்பவருக்கு கதவு எண் 6/255 என்று பேரூராட்சியினர்</u>

மாற்றியுள்ளனர். இது முற்றிலும் தவறானதாகும். ஒருவர் பெயரில் உள்ள சொத்தை வேறொரு நபருக்கு மாற்றம் செய்யும்பொழுது மேற்படி சொத்துக்கு பிற வாரிசுகள் இருக்கிறார்களா என்பதை அறிந்தும்,அவ்வாரிசுதாரர்களிடம் தடையின்மைச் சான்று பெற்ற பின்னர் தான் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும். இந்நேர்வில் மனுதாரரின் தகப்பனார் பி.கே. ஜோகைய்யா என்பவர் பெயரில் இருந்த சொத்துவரி கேட்பை அவரின் வாரிசதாரர்களில் ஒருவரான ஜே. லிங்கன் என்பவருக்கு மாற்றியுள்ளது. சட்டவிதிகளின்படி தவறானதாகும்.

மேலும் பி.கே. ஜோகைய்யா என்பவரின் மற்றொரு வாரிசுதாரான மனுதாரர் B.J. பீமன் என்பவர் தங்கள் தகப்பனார் பெயரில் உள்ள குடும்ப சொத்தை எவ்வாறு ஜே.லிங்கன் என்பவருக்கு கதவு எண் 6/255 என்று எண்ணிட்டு மாற்றி கொடுக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தை தகவலறியும் உரிமைச் சட்டத்தில் தகவலாக தரும்படி விண்ணப்பம் அளித்தும், மேற்படி தகவல் மூன்றாம் நபர் தொடர்புடையது என குறிப்பிட்டு பேரூராட்சியால் மறுக்கப்பட்டுள்ளது. மேலும் கதவு எண் 6/241A என்ற கதவு எண்ணுக்கு யார் பெயரில் சொத்துவரி கட்டப்பட்டு வந்தது என்ற விவரம் பேரூராட்சியில் இல்லை என்று குறிப்பிடுவதும் ஏற்றுக் கொள்ள இயலாது. பேரூராட்சி செயல் அலுவலரின் இத்தகைய பொறுப்பற்ற, முறையற்ற தகவலை தெரிவித்தமைக்கு இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது.

எனவே மேற்கண்ட விவரங்களின்படி இந்நேர்வில் கீழ்குந்தா பேரூராட்சி செயல் அலுவலர் ஒருதலைப்பட்சமாக நடந்து கொண்டது பட்டவர்த்தமாக அறிந்து கொள்ள முடிகிறது எனவே குடும்ப சொத்து என கருதப்படும் பி.கே. ஜோகைய்யா என்பவரின் பெயரில் உள்ள ஒரு சொத்தை அவரது ஒருவாரிசான ஜே.லிங்கன் என்பவருக்கு, பிற வாரிசுதாரர்களிடமிருந்து தடையில்லாச் சான்று அல்லது ஒப்புதல் பெறாமல் திரு.ஜே. லிங்கன் என்பவருக்கு மாற்றிக் கொடுத்த செயல் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்திட பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

**மேலும் மனுதாரரின் தந்தை திரு. பி.கே. ஜோகைய்யா என்பவர் பெயரில் வரி செலுத்தி வந்த சொத்துவரி கேட்பை சட்டத்திற்கு புறம்பாக திரு.ஜே. லிங்கன் என்பவருக்கு 6/255 என்ற எண்ணிட்டு மாற்றம் செய்யப்பட்ட உத்தரவை உடனடியாக இரத்து செய்து முன்னர் இருந்தவாறே மேற்கண்ட சொத்திற்கான வரி கேட்பை திரு. பி.கே. ஜோகைய்யா என்பவரின் பெயரில் மாற்றம் செய்திட கீழ்குந்தா பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.**

**பெயர் மாற்றம் செய்வது குறித்து கள அலுவலர்கள் விதிகளை பின்பற்றாமல் தன்னிச்சையாக செயல்படுவதாலும் பெயர் மாற்றம் செய்வது குறித்து அனைத்து செயல் அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கிடுமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.**

The Town Panchayat officials have carried out the name transfer without any documentary basis such as registered will or clearance release letter signed by the siblings of the family member Thiru J. Lincoln, which is unlawful violative and discriminatory. This exposes the unethical conduct of the officials concerned, who have transgressed their positional limits with ulterior and unholy motives by abetment, collusion and corrupt mindset. Severe disciplinary

action should be taken against the officials concerned in this issue by the Director of Town Panchayats The name transfer is ordered to be cancelled and the original name to be restored status quo ante. An action taken report should be sent to this Forum within 30 days by the Director of Town Panchayats

2023–ஆம் ஆண்டு, ஜுன் 15–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு. B.J. பீமன்,
பாக்கோரை,
குந்தாபாலம்,
நீலகிரி மாவட்டம்

2)செயல் அலுவலர்,
கீழ்குந்தா பேரூராட்சி
நீலகிரி மாவட்டம்

3)பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.அர்.சி நகர், சென்னை – 28.

4)இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை –600028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றம்
சென்னை-600 032